மாத இதழ்

ஆகஸ்ட் 2013



# பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

மலர் 14

இதழ் : 4

# கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்

ஆமோ. 5:6



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர, சகோதரிகளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நம் தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் 8 —வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். கடந்த மாதத்தில் சபையின் ஆராதனைகள் மற்றும் ஊழயங்களை மிக நேர்த்தியாய் நடத்த கிருபை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். அதுபோல் இந்த மாதத்தில் சபையின் மூலம் நடைபெறும் ஆராதனைகள், வேத பாட வகுப்புகள் மற்றும் முழு இரவு ஜெபம், சபையின் ஊழியங்கள் யாவற்றிற்காகவும் நம் ஜெபங்களில் நினைத்துக் கொள்வோம்.

**““தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பு””** (எபே. 2:4). ஆதாம் பாவம் செய்தவுடன் தேவன் அவனிடம் வந்து கேள்வி கேட்டவுடன் சற்றும் தாமதிக்காமல் தன் மனைவியின் மீது குற்றம் சாட்டினான். வேதத்தில் சாத்தானைக் குறித்து வெளி. 12:10 — ல் குற்றம் சாட்டுகிறவன் என்று காண்கிறோம். குற்றம் சாற்றுவது சாத்தானின் தீய குணம். விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயை வேதபாரகர், பரிசேயர் இயேசுவிடம் கொண்டு வந்து இவள் பாவம் செய்தாள் என்று குற்றம் கூறினர். ஆனால் ஆண்டவர் இயேசுவோ நீ போ இனி பாவம் செய்யாதே (யோவா. 8:11) என்றார். இது நமது தேவனின் மன்னிக்கும் குணம். இப்படிப்பட்ட இரக்க குணத்தை நாம் பெற்றிருந்தால் நான், நாம் தேவனுடைய பிள்ளை என்று அர்த்தம். இரக்கம் செய்யாதவனுக்கு, இரக்கமில்லாத நியாயத் தீர்ப்பு கிடைக்கும். நியாயத் தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும் (யாத். 2:13).

1. ஒருவரால் தீமையாய் நடத்தப்படும் போது, ஓர் மறுபடியும் பிறந்த விசுவாசி யின் இருதயத்திலிருந்து இரண்டு சப்தங்கள் ஒலிக்கின்றன. (1) அவன் உன்னை நடத்தினது போலவே நீயும் நடத்து என்கிற மாம்சத்தின் சத்தம். (2) பரவாயில்லை, அவனிடம் இரக்கமாயிருந்து அவனை மன்னித்துவிடு என்கிற பரி. ஆவியானவரின் சத்தம். முதலாவது ஒலித்தது நியாயந்தீர்த்துவிடு என்கிற மாம்சத்தின் சத்தம். ஆனால் ஆவியானவரின் சத்தமோ இரக்கத்தின் சப்தமாகும். இவ்வாறு கேட்கிற சப்தத்தின் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டிவிட்டால் அது இவ்வுலக வாழ்வின் மிக அருமையானதாக இருக்கும். அதுமாத்திரமல்ல நான் கடைசி நாளில் தேவனால் நியாயந்தீர்க்கப்படும் போது இப்பூமியில் நான் காட்டிய இரக்கம் எனக்கு வர வேண்டிய நியாயத்தீர்ப்பை வென்று தேவனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கும்.

2. தேவை உள்ளவர்களுக்கு இரங்கி உதவி செய்வது இரக்கத்தின் மற்றுமொரு குணம். ஒருவன் வஸ்திரமோ, ஆகாரமோ இல்லாதவனாக இருப்பவனை பார்க்கும்

அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும். –நீதி. 10:2

போது அவனுடைய சரீரத்தின் தேவைகளை கொடாவிட்டால் பிரயோஜனம் என்ன? (யாக். 2:16). ஆதலால் கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நம் தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் இருப்பது போல நாமும் இரக்க குணத்தில் உள்ள நமக்கு தீமை செய்பவர்களை மன்னிப்பது மற்றும் தேவையில் உள்ளவர்களுக்கு கொடுப்பது போன்ற இரக்க குணத்தில் பெருகுவதற்கு தேவன் நமக்கு கிருபை செய்வாராக.

நாமும் நம்மை ஆராய்ந்து பார்த்து இந்த இரக்க குணத்தில் பெருகுவோம். நியாயத்தீர்ப்பில் இரக்கம் மேன்மை பாராட்டும். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**



# REMINDER

## Holiday Home work for Sunday School Children

**And that from childhood you have known the Holy scriptures, which are able to make you wise for salvation through faith which is in Christ Jesus (2 tim. 3:15).**

**Here is your holiday homework to enrich your Bible knowledge.**

| Class in Sunday School | Chapter to be memorized |
|---|---|
| Beginners | Psalm - 23 |
| Primary | Psalm - 24 |
| Junior | Psalm - 34 |
| Intermediate | Psalm - 103 |

*Have a lot of fun & enjoy your holidays*

**Sunday School Teachers**
**St. Paul's Church, Ahmadi**

Note to parents:- Please encourage your children to memorize the Bible Verses.

# தேடுங்கள்



இந்த உலகத்தில் ஒவ்வொரு ஜீவராசியும் சாகாமல் பிழைக்க வேண்டும் என்றே போராடுகிறது. எந்த உயிரும் தான் அழிய வேண்டும் என விரும்புவது இல்லை. மனிதனும் இதற்கு விதி விலக்கல்ல. எப்படியாவது இந்த உலகத்தின் தீங்குகளுக்கு தப்பிப் பிழைக்க வேண்டும் என்றே ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். ஆனால் அதற்கு எத்தனை பாடுகள்! நோயினால் ஏற்படும் உபத்திரவங்கள், பாவத்தினால் ஏற்படும் இழப்புகள், வறுமையினால் உண்டாகும் போராட்டங்கள், அன்பானவர்களை இழந்து விடுவதினால் உண்டாகும் பாதிப்பு, எதிர்ப்புகள், ஏமாற்றங்கள், ஏளனங்கள், நம்பினவர்கள் செய்யும் துரோகங்கள், அடிமைத்தனம் என வகை வகையாய் எவ்வளவோ பாடுகள்? இவைகளுக்கு தப்பிப் பிழைக்க வேதாகமம் நமக்கு வழியை காண்பிக்கிறது. **""கர்த்தரை தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்""** (ஆமோ. 5:6) **""என்னை தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்""** (ஆமோ. 5:4). எப்படியெல்லாம் கர்த்தர் தம்மை தேடினவர்களை பிழைக்க வைத்தார் என்றால்...

**அன்னாள்:—** அநேக நாட்களாக குழந்தை பாக்கியம் இல்லாமல் வேதனையோடு காணப்பட்ட அன்னாள் கர்த்தரை தேடினாள். அவள் சக்களத்தி பெனின்னாளோ அநேக முறை அன்னாளை அவமானப்படுத்தி வந்தாள். அதனால் அன்னாள் இரவு பகலாக கண்ணீர் வடித்து வந்தாள். மனிதர்களை நாடிப் போய் குறைகளை சொல்லி அழுவதை விட ஆண்டவரை விடாப்பிடியாய் பற்றிக்கொள்ள அன்னாள் தீர்மானித்தாள். ஆண்டவரே நீர் என்னை ஆசீர்வதித்தால் ஒழிய நான் உம்மை விட மாட்டேன் என்று கதறி ஜெபித்தாள். அழகான ஒரு ஆண் குழந்தையை ஈன்றெடுக்கும்படி கர்த்தர் கிருபை பராட்டினார். அவள் சொன்னாள் **""இந்த பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன். நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளையிட்டார்""** (சாமு. 1:27). இன்றைக்கும் அநேகர் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள மனிதர்களின் ஆலோசனைகளை நாடுகிறார்கள். கர்த்தரை யாரும் தேடுவதில்லை. **""சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்: கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது""** (சங். 34:10) என வேதம் கூறுகிறது. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்று கூறின இயேசுவே நமக்கு வழி மனங்கலங்காதிருங்கள். அன்னாள் ஒரு சாதாரண பிள்ளையை பெற்றெடுக்கவில்லை சாமுவேல் என்ற தீர்க்கதரிசியை பெற்றெடுத்தாள். சந்ததி சந்ததியாய் ஆசீர்வாதங்களை பொழியும் தேவன் அன்னாளை அவ்வளவாய் ஆசீர்வதித்தார்.

**தாவீது:—** தாவீதின் உயிர் விலை பேசப்பட்டது: சவுல் அரசன் எந்த நேரத்திலும் தாவீதை கொலை செய்யக் கூடிய சூழ்நிலை. தாவீதுக்கு உதவி செய்த அபிமலேக்கு என்ற ஆசாரியனுடைய குடும்பத்தையே சவுல் அழித்துப்போட்டான். பொறாமை என்ற மூர்க்க குணம் சவுலுக்கு இருந்தது. எப்படியாவது தாவீதைக் கொல்ல வேண்டும் என பின்தொடர்ந்து போனான். அந்த சூழ்நிலையில் தாவீது சொன்னான் **""கர்த்தரை**

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்: -நீதி. 12:22

**என் முன்பாக வைத்திருக்கிறேன்: அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை""** (சங். 16:8) என்று. கர்த்தர் தன்னை சகல உபத்திரவங்களிலிருந்தும் பாதுகாப்பார் என உறுதியாக நம்பினான். **""என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கி விடுவார்""** (சங்கீ — 25:11) என்று சொன்னான். எவ்வளவுதான் சவுல் பின் தொடர்ந்தாலும் எல்லா நேரத்திலும் கர்த்தர் தாவீதை பாதுகாத்தார். அது மட்டுமல்ல சவுலைத் தான் தாவீதிடம் ஒப்புக் கொடுத்தார். தாவீது நினைத்திருந்தால் ஒரு வினாடியில் சவுலை கொன்றிருக்க முடியும். என்றாலும் தாவீதோ சவுலை எதிரியாக நினைக்கவில்லை என் கையால் நான் சவுலை கொல்ல மாட்டேன்ஹ கர்த்தர் பார்த்துக் கொள்ளட்டும் என விட்டு விட்டான். ஏன் அப்படி செய்தான்? கர்த்தர் மேல் இருந்த விசுவாசம். கர்த்தர் தன்னை பாதுகாக்க வல்லவர் என நம்பி வாழ்ந்தான். **""நான் கர்த்தரை தேடினேன் அவர் எனக்கு செவி கொடுத்து என்னுடைய எல்லா பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்""** (சங். 34:4). இறுதியில் சவுல் யுத்தத்தில் செத்தான்: தாவீதோ இஸ்ரவேலை ஆளும் பேரரசனானான். பிரியமானவர்களே நாமும் கர்த்தரை உறுதியாய் பற்றிக் கொள்வோம்ஹ ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வோம்.

**<u>ரூத்:</u> —** இளவயதில் கணவனை இழந்து விதவையானாள் ரூத் என்ற பெண். செல்வ செழிப்போடு மோவாப் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருந்த எலிமலேக்கு நகோமி ஆகியோரின் இளைய மருமகள் தான் இந்த ரூத். திடீரென்று இந்த குடும்பத்தில் புயல் வீசியது. அடுத்தடுத்து எலிமலேக்கும் அவன் மகன்கள் மக்லோன், கிலியோன் ஆகியோர் மரணமடைந்தார்கள். பிழைக்கச் சென்ற இடத்தில் இழப்புகள், வறுமை, மன துக்கம், ஆதரவற்ற நிலைமை. இந்த சூழ்நிலையில் மூத்த மருகளும் இவர்களை விட்டு விட்டு சென்று விட்டாள். ஆனால் ரூத்தோ மாமியாரை பற்றிக் கொண்டாள் அவள் சொன்னாள் ""நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன்"" என்று. உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என ரூத் பற்றிக் கொண்டதால் கர்த்தர் அந்த குடும்பத்தில் வசந்தம் வீச செய்தார். நகோமியின் சொந்த ஊரான பெத்லகேமுக்கு அவர்கள் வந்த போது அவர்கள் இனத்தான் ஆன போவாஸ் என்ற மிகப் பெரிய செல்வந்தன் ரூத்தை மணமுடிக்க வழி வாசல்களை கர்த்தர் திறந்து கொடுத்தார். ரூத்தின் வறுமை நீங்கியது: இழந்த சந்தோஷம் திரும்ப கிடைத்தது: பெரிய செல்வ சீமாட்டியாக மாறினாள். அல்லேலூயா! ஆண்டவரின் வழி நடத்துதல் எத்தனை அற்புதமானது பார்த்தீர்களா? அவர் வனாந்திரத்திலே வழியை உண்டுபண்ணுகிறவர். அவாந்திர வெளியிலே ஆறுகளை உண்டுபண்ணுகிறவர். வாழ்க்கையிலே இனிமேல் பிழைக்க வழியே இல்லை அவ்வளவுதான் என கலங்கும் போது கர்த்தர் தன் பிள்ளைகளை தாங்குகிறார். **""என் கால்கள் சறுக்கிறது என்று சொல்லும் போது கர்த்தாவே உமது கிருபை என்னைத் தாங்குகிறது: எனது உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவை தேற்றுகிறது""** (சங். 94: 18,19). ரூத்தின் சந்ததியில்தான் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில்

மனுஷ குமாரனாக அவதரித்தார். தரித்திரம் பிடித்த, நம்பிக்கையற்ற, எல்லாவற்றையும் இழந்த, ஒரு விதவையின் குடும்பத்தை கர்த்தர் காப்பாற்றி பாலைவனமாய் காணப்பட்ட அவளது வாழ்க்கையை சோலைவனமாக மாற்றினார். ரூத் கர்த்தரையே தேடினதால் இவ்வளவு ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டாள். **""தவனமுள்ள ஆத்துமாவை கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார்""** (சங். 107:8). **""கர்த்தாவே உம்மை தேடுகிறவர்களை நீர் கை விடுகிறதில்லை: ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்""** (சங். 9:10).

பிரியமானவர்களே! கர்த்தரையே நாம் தேடுவோம்: நம் மன பாரங்களை அவரிடம் மாத்திரமே சொல்வோம். அற்புத மாற்றங்களை நம் வாழ்க்கையில் காண்போம். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

**கர்த்தரின் பணியில்**
**சகோ. ஸ்டாலின்**




## ஜெயிக்க

வலியோடு போராடினால் தான்
ஒரு பெண் தாயாக முடியும்
இருளோடு போராடினால் தான்
புழு வண்ணத்துப் பூச்சியாக முடியும்
மண்ணோடு போராடினால் தான்
விதை மரமாக முடியும்
இயேசுவின் துணையோடு போராடினால் தான்
நீ உலகை ஜெயிக்க முடியும்

**- கொம்மையன்**

**கொய்யா பழம்**

## பழம் சாப்பிடுங்க

உடல் வளர்ச்சியைத் தருவதோடு எலும்புகள் பலம் பெற கனி சமாய் உதவி செய்கிறது. வயிற்றுப் புண்ணை ஆற்றுகிறது. உடல் உஷ்ணத்தையும் குறைக்கவல்லது.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

மெய்ச்சாட்சிக்காரன் பொய்சொல்லான்: பொய்ச்சாட்சிக்காரனோ பொய்களை ஊதுகிறான். -நீதி. 14:5

# உண்மையான ஊழியன்

**""மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்""** (எபே. 6:8). ரோட்டின் ஓரம் ஒரு குடையின் கீழ் செருப்பு தைத்துக் கொண்டு போகிறவர்கள், வருகிறவர்களின் ஷூக்களை பாலிஷ் செய்து கொண்டிருந்தான் ஒரு சிறுவன். தகப்பன் தொழிலை இளமையிலேயே கற்றுக் கொண்டது நல்லதாய் தோன்றியது. அவர் இறந்த பிறகு அவனது தாயை கவனிக்க அது கை கொடுத்தது. அச்சிறுவன் காசுக்காக கடமையே என தன் வேலையை செய்யமாட்டான். யாரோ ஒருவர் பாலிஷ் போட தங்கள் காலணியை அவன் முன் நீட்டியதும் நிமிர்ந்து பார்த்து சிரித்த முகத்துடன், சிறப்பாய் நேர்த்தியாய் அதை செய்து முடிப்பான். எப்போதும் வழக்கமாய் வரும் ஒருவர் ஒரு நாள் அவனிடம் மிகவும் சிரத்தை எடுத்து, கவனமாய் வேலை செய்கிறாயே இதே வேலையை செய்யும் மற்றவர்களிடம் இல்லாத ஏதோ ஒன்று உன்னிடம் காணப்படுகிறதே அது என்ன? என்று கேட்டார்.

சிறுவன் மகிழ்ச்சியோடு ஐயா நான் ஒரு கிறிஸ்தவன். இயேசு கிறிஸ்துவின் குணநலன்களை என் வாழ்விலும் செயல்படுத்த பிரயாசப்படுபவன், அதோடு ஒவ்வொருவருடைய காலணிகளை நான் பழுது பார்க்கும் போதும் இயேசு ராஜா என்னிடம் வந்து என் காலணிகளுக்கு பாலிஷ் போடு என்று சொன்னால் நான் எப்படி செய்து கொடுப்பேனோ அப்படித்தான் உங்கள் ஒவ்வொருவருக்கும் செய்கிறேன் என்று கூறினான். அந்த நபர் இவனது வார்த்தையின் மூலம் கிறிஸ்துவை குறித்து அறிந்து வேதத்தை வாசித்து கர்த்தரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான்.

மனுஷருக்கெல்லாம் ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல் மனதோடே ஊழியஞ் செய்யுங்கள் என்று அப். பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஆலோசனையாய் சொல்கிறார். எபேசியர் ஆறாம் அதிகாரத்திலே பிள்ளைகளுக்கு, பெற்றோருக்கு, மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்று நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள் என்று கூறுகிறார். பிரியமானவர்களே! நாம் எந்த தொழில்செய்தாலும் எந்த வேலை செய்தாலும் நமக்கு மேலுள்ள அதிகாரிகளுக்காக, அரசாங்கத்திற்காக செய்வோமானால் வேலைப்பளு அதிகமாகும் போது அவர்கள் மீது கோபமும் எரிச்சலும் வரும். அநேக நேரங்களில் அரசாங்க வேலையிலும் சுய லாபத்தை தேடுகிறவர்களாய் இருப்போம். ஆனால் வேதம் கூறுகிற இந்த ஆலோசனையை நமக்குரியதாக்கிக் கொண்டு ஒரு நாளில் நாம் செய்யும் எந்த வேலையையும் நான் இதை கர்த்தருக்கென்று செய்கிறேன். அவர் இதை காண்கிறார் என்ற சிந்தையோடு செய்வோமானால் அந்த வேலையில் உண்மை, நேர்மை, நேர்த்தி, சிறப்பு யாவும் நாமறியாமலேயே வந்து விடும். கிறிஸ்து நம் மூலம் அந்த அலுவலகத்தில் மகிமைப்படுவார். இப்படி உத்தம கிறிஸ்தவர்களாக வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

**கர்த்தரின் அன்பில்**

Sis. **ஹேனா எசேக்கியேல்**

கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து; நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது. -நீதி. 15:3

# அல்பேயுவின் மகனாகிய அப். யாக்கோபின் இரத்தசாட்சி

பழைய ஏற்பாட்டில் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பிறந்த இரண்டாவது மகன் பெயர் யாக்கோபு. இந்த யாக்கோபின் நினைவாக புதிய ஏற்பாட்டின் காலத்தில் பலர் இந்த பெயரை வைத்துக் கொண்டார்கள். இன்றும் பலர் இந்த பெயரை வைத்துக் கொள்ளுகிறார்கள். குறிப்பாக மரியாளின் கணவரான யோசேப்பின் தகப்பன் யாக்கோபு. செபெத்தேயுவின் மகனும் யோவானின் உடன் பிறந்தவனுமாகிய யாக்கோபு. (இவரும் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவரும், புதிய ஏற்பாட்டில் ஸ்தேவானை அடுத்து இரண்டாவது இரத்த சாட்சியாய் மரித்தவர்). மரியாளின் மகனும் இயேசுவின் சகோதரனுமாகிய யாக்கோபு. (இவர்தான் யாக்கோபு என்ற பெயரில் ஒரு பொதுவான நிருபத்தை எழுதினவர். இவருடைய அண்ணனாகிய இயேசு கிறிஸ்து உயிரோடு இருக்கும் போது அவரை தேவகுமாரன் என்று விசுவாசிக்கவில்லை. இயேசு உயிர்த்தெழுந்த பிறகு இவருக்கும் தரிசனமானார். பின்புதான் இயேசுவை தேவன் என்று விசுவாசித்தார்). அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு. (இவருடைய சகோதரன்தான் மத்தேயு. அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவர்).

இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் இருவர் பெயர் யாக்கோபு. ஒன்று நாம் எல்லோரும் அறிந்த யோவான் சுவிஷேசத்தை எழுதிய யோவானின் சகோதரன் யாக்கோபு. மற்றொருவர் அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு. இவரைப் பற்றி வேதத்தில் பெயரை தவிர வேறு எதுவும் காணப்படவில்லை. இவர் கப்பர்நகூமை சேர்ந்தவர். இவரது தந்தையின் பெயர் கிலியோபாஸ் என்றழைக்கப்பட்ட அல்பேயு. தாயின் பெயர் மரியாள். இந்த மரியாள் இயேசுவின் தாயாகிய மரியாளின் நெருங்கிய உறவினர். வரி வசூலிப்பவராக இருந்த மத்தேயுவின் உடன் பிறந்த சகோதரனே இந்த யாக்கோபு. இவர்கள் குடும்பத்தில் யோசேப்பு எனப்பட்ட மற்றொரு சகோதரனும் சலோமி எனப்பட்ட சகோதரியும் இருந்தார்கள். இவர்கள் இஸ்ரவேல் ஜனங்களிடையே ஆசாரிய ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்ட லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இந்த யாக்கோபு கானானியனாகிய சீமோனைப் போல செலோத்தே என்ற தீவிரவாத பிரிவைச் சேர்ந்தவர். செலோத்தே பிரிவைப் பற்றி கானானியனாகிய சீமோனின் அறிமுகத்தில் காணலாம்.

திருச்சபை வரலாற்றில் பவுல், பேதுரு, அகஸ்டின், லூத்தர் போன்ற குறிப்பிட்ட சிலறையே நாம் இன்று நினைவில் வைத்திருக்கிறோம். ஆனால் பல்லாயிரக்கணக்கான பெயர் அறியப்படாத ஊழியர்களாலும் ஆயிரக்கணக்கானோர் சிந்திய இரத்தத்தினாலுமே திருச்சபை வளர்ந்தது. நாம் இப்பொழுது படித்துக் கொண்டிருக்கும் அல்பேயுவின் மகனாகிய யாக்கோபும் இதற்கு முன்னோடியாக விளங்குகின்றார். இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் போது நிக்கோதேமு, சக்கேயு மற்றும் பலரை சந்தித்தார். ஆனால் அவர்களை தமக்கு சீஷராக வரும்படி அழைக்கவில்லை. ஓர் அறிமுகம் இல்லாத யாக்கோபைதான் இயேசு அழைத்தார். இந்த பெரிய பாக்கியம் பெற்றவர்

கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள். -நீதி. 16:6

தான் இவ் யாக்கோபு. நாமும் யாக்கோபைச் போல அறியப்படாத நபராகவோ அல்லது புகழ் பெறாதவர்களாகவோ இருக்கலாம். என்றாலும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சொந்த பிள்ளைகளாக இருக்கிற நாம் எவ்வளவு பெரிய பாக்கியவான்கள். நம்முடைய பெயர்கள் வரலாற்றில் எழுதப்படாமல் போகலாம். ஆனால் பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் எழுதியிருந்தால் நாம் பாக்கியவான்கள். துவக்ககால வரலாற்றாசிரியர்கள் இந்த அல்பேயுவின் மகனாகிய யாக்கோபும் இயேசுவின் சகோதரர்களில் ஒருவரான யாக்கோபும் ஒருவரே என்று எண்ணி குழப்பமடைந்திருக்கிறார்கள். அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு தோற்றத்தில் இயேசுவை போலவே இருந்தார். அதனால்தான் உண்மையான இயேசுவை கண்டு பிடிப்பதற்காகவே பிரதான ஆசாரியர்கள் யூதாஸுக்கு 30 வெள்ளிக் காசுகளைக் கொடுத்தார்கள். இயேசுவின் சகோதரரான யாக்கோபு இயேசுவின் சீடன் அல்ல. இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு இவருக்கு தரிசனமானார். அதற்குப் பின்புதான் இயேசுவை பின்பற்றினார். இந்த இயேசுவின் சகோதரரான யாக்கோபு தான் யாக்கோபு நிருபத்தை எழுதினவர்.

இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு சீரிய திருச்சபையில் முதல் பேராயராக பணி புரிந்தார். இவருடைய நாட்களில் எருசலேமில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து பிரசங்கிக்கக் கூடாது என தடை பண்ணப்பட்டது. ஆனால் இவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்தும் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்தும் யாருக்கும் பயப்படாமல் பகிரங்கமாக பிரசங்கித்தார். முதுகெலும்பில்லாமல் ஒரு மனிதனால் நிற்க முடியாது. ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு எவ்வளவு முக்கியமோ அதுபோல வேதத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர்தெழுதலின் நம்பிக்கை முக்கியமாகும். நமக்கு முன்மாதிரியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலின் முதற்பலனானார் என்று எருசலேமில் உள்ள யூதர்களுக்கு அப். யாக்கோபு போதனை செய்தபடியால், யூதர்கள் கடுங்கோபம் கொண்டு அப். யாக்கோபை கல்லெறிந்து கொன்றார்கள்.

இரத்த சாட்சியாக மரித்த அப். யாக்கோபு எருசலேமில் அடக்கம் பண்ணப்பட்டார். ஜஸ்டினியன் இவரது எலும்புகளை எடுத்து கான்ஸ்டான்டிநோபிள் பட்டணத்திலுள்ள புனித அப்போஸ்தலர் ஆலயத்தில் பத்திரப்படுத்தினார்.கி.பி 572 — ல் இவரது எலும்புகள் ரோம் நகருக்கு எடுத்து செல்லப்பட்டது. போப் மூன்றாம் ஜாண் ஆலயம் ஒன்றைக் கட்டி அதில் இவரது எலும்புகளை வைத்தார். இந்த ஆலயம் பிலிப்பு, யாக்கோபு அப்போஸ்தலர் ஆலயம் என்று முதலில் அழைக்கப்பட்டது. பத்தாவது நூற்றாண்டிலிருந்து இந்த ஆலயம் புனித அப்போஸ்தலர் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு பிலிப்பு, யாக்கோபு மற்றும் பிற அப்போஸ்தலர்களின் எலும்புகளும் வைக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**அன்புள்ள சகோதரன்**
**யேசுநாயகம்**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. வனிதா புருஷோத்தமன்
- செல்வி. நிதி ஏஞ்சலீனா செல்வகுமார்
- செல்வி. காயத்ரி கொம்மையன்
- செல்வி. புஷ்பா ராஜன்
- செல்வி. சிஃபன்சிஹா சாம்ஆனந்த்
- செல்வன். ஜாப் ஆபிரகாம் வில்கின்ஸ்
- செல்வன். எரிக் நாதான் ஆன்றனி
- செல்வன். ரோஷன் ஸ்டீபன்
- சகோதரி. மிலி ஜஸ்டஸ்
- சகோதரி. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
- சகோதரி. ஐரின் ஃபிரீடா டென்சிங்
- சகோதரி. வெற்றி செல்வி புருஷோத்தமன்
- சகோதரி. லைசா பால்பொன்னையன்
- சகோதரி. எமிமா சாமுவேல்
- சகோதரி. ஸ்நேக லதா கிறிஸ்டோபர்
- சகோதரி. சவ்மியா சுனில் வின்ஸ்
- சகோதரி. ஹெலன் ஷீலா
- சகோதரி. டெய்சி ஸ்ரீனா ஆன்றனி
- சகோ. ஜெப துரை
- சகோ. ஜெயச்சந்திரன்
- சகோ. வில்சன் செல்லையன்
- சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
- சகோ. ஆரோக்கிய தாஸ்
- சகோ. சதீஷ்குமார்
- சகோ. வேளாங்கண்ணி
- சகோ. அருண் இம்மானுவேல்
- சகோ. ஜோயல் ஜெயசீலன்
- சகோ. எசேக்கியேல் ஞானதாஸ்
- சகோ. அற்புதராஜ்



## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. ஜெயக்குமார் ஞானதாஸ்
- திருமதி & திரு. ஸ்டீபன் ஜெயக்குமார்
- திருமதி & திரு. ஜோசப் பீற்றர்
- திருமதி & திரு. பால்ராஜ் ஆமோஸ்
- திருமதி & திரு. சிவகுமார்
- திருமதி & திரு. விஜய் இம்மானுவேல்
- திருமதி & திரு. ஆரோக்கியராஜ்
- திருமதி & திரு. நித்ய செல்வகுமார்
- திருமதி & திரு. பால் புருஷோத்தமன்
- திருமதி & திரு. ராஜாசிங்
- திருமதி & திரு. சாலொமோன்



கர்த்தரின் நாமம் பலத்த துருகம்: நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான். -நீதி. 18:10

# ஆகஸ்ட் 2013 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 04-08-2013 | சகோ. விசு | சகோ.ரவிஜாண் பீற்றர் |
| 11-08-2013 | சகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. டேனியேல் |
| 18-08-2013 | சகோ. ஸ்டாலின் | சகோ. ஐசக்துரை |
| 25-08-2013 | சகோ. ஜெயசேகர் | சகோ. அற்புதராஜ் |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 02-08-2013 | சகோ. ஐசக்துரை | சகோ. ஸ்டாலின் |
| 09-08-2013 | சகோ. டேவிட் குமார் | சகோ. ஜெயசேகர் |
| 16-08-2013 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23-08-2013 | சகோ. ஸ்ரீனிவாசன் | சகோ. ரவிச்சந்திரன் |
| 30-08-2013 | குடும்ப ஆராதனை | |

சங்கிலி தொடர் ஜெபம்: 01-08-2013 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 08-08-2013 இரவு 10 pm முதல் காலை 2 am வரை

பெண்கள் கூடுகை: பின்னர் அறிவிக்கப்படும்.

வாலிபர் கூடுகை: பின்னர் அறிவிக்கப்படும்.

பொய்ச்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்: பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை. நீதி. 19:5

# மாமபு(ப)னிதர் பண்டித ராமாபாய்

## (1858 – 1922)

குழந்தைத் திருமணம் செய்வதும் பெண்களை அடிமைகளாகக் கருதுவதும் மற்றும் கல்வியை பெண்களுக்கும் விலக்கி வைக்கப்பட்ட காலம் அது. கணவன் மரணத்திற்குப்பின் பெண்ணுக்கு வாழ்வு இல்லை என்று எண்ணப்பட்ட நேரத்தில் பெண்களின் விடுதலைக்காக போராட தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்தான் ராமாபாய். வைதீக இந்துவான ஆனந்த் சாஸ்திரி டாங்கசே மகளாக *1858 – ல்* மஹாராஷ்டிராவில் பிறந்தார். பக்தி நிறைந்த இவரது குடும்பத்தினர் புண்ணிய ஸ்தலங்கள் தோறும் சென்று நீராடி ஆலயங்களைத் தரிசித்து அங்கிருக்கும் விக்கிரகங்களையும் வழிபட்டனர். சமஸ்கிருதம் கற்றறிந்த இவரது தந்தை வேதநூல்களை பக்த கோடிகளுக்கு உபநி யாசம் செய்வதும் வழக்கம். உயர்ந்த சிந்தனை கொண்ட ஆனந்த் சாஸ்திரி தனது மனைவிக்கும் மகளுக்கும் சமஸ்கிருத மொழியையும் வேதங்களையும் புராணங்களையும் கற்றுக் கொடுத்தார். மகள் ராமாபாய் கல்வியில் சிறந்து விளங்கினார்.

செல்வச் செழிப்புடன் வாழ்ந்த ராமாபாய் குடும்பத்தினர் தர்மச் செயல்களை தனது கடமையாக எண்ணி அதிக செலவுகளுக்குட்பட்டு தமது சொத்தையே இழந்து விட்டனர். தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று மங்களூரில் வாழ்ந்த ராமாபாய் குடும்பமும் ஆகாரத்திற்காக அங்குமிங்குமாக அலைந்து திரிந்தது. அவர் களது மதக்கட்டுப்பாட்டின்படி சம்பந்தமில்லாத யாதொரு வேலையும் செய்து பணம் சம்பாதிக்கக் கூடாது என்ற கொள்கையின் படி வேறு எந்த வேலையும் செய்யாமல் பல திருத்தலங்களுக்கு ஆயிரக்கணக்கான மைல்கள் நடந்து சென்று அங்கு புராணங்களை ஓதிக்கொண்டும் உபநியாசம் செயதும் கிடைக்கும் பணம் மற்றும் பொருட்களை வைத்து குடும்பம் நடத்தினார்கள். எனினும் ஒருசில மாதங்களில் ராமாபாயின் தகப்பன் தாய் சகோதரிமார் யாவரும் ஒருவர்பின் ஒருவராய்ப் பட்டினிக்கு இரையானார்கள். சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்த ராமாபாயும் அவளது சகோதரனும் ஒருநாள் தங்களையே மாய்த்துக் கொள்ள முயற்சி செய்த போது தேவனின் தயவு அவர்களை மடிய விடாமல் தடுத்தது.

*1878 – ல்* கொல்கத்தாவிற்கு வந்து சேர்ந்த ராமாபாய் சமஸ்கிருதத்தில் சொற்பொழிவு நடத்த ஆரம்பித்தார். ராமாபாய் முழுமையாக இந்துமதப் பற்றுடன் செய்யும் சொற்பொழிவு கல்கத்தாவிலுள்ள அநேக பண்டிதர்களை கவர்ந்தது. அவரது கூரிய அறிவைப் பராட்டி பண்டிதர் என்ற பட்டமும் சூட்டினர். கொல்கத்தாவில் சில விசுவாசிகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு பண்டித ராமாபாய்க்கு கிடைத்தது. கிறிஸ்தவ ஆராதனைகளும் ஊழியங்களும் அவரை அதிகம் கவர்ந்தன. பண்டித ராமாபாய் தனது *22 – ம்* வயதில் ஒரு படித்த பெங்காளிய மனிதனைத் திருமணம் செய்தார். திருமணமான *19 – ம்* மாதத்திலேயே கிறிஸ்தவ மதத்தின் எதிரியாகக் காணப்பட்ட இவரது கணவர் காலரா வியாதியினால் மரித்துப்போனார். 24 வயதான

மூடன் ஞானத்தில் பிரியங்கொள்ளாமல்; தன் மனதிலுள்ளவைகளை வெளிப்படுத்தப் பிரியப்படுகிறான். -நீதி. 18:2

இளம் விதவை ராமாபாய் தன் மகளுடன் பூனா சென்றார். அங்கு வாழ்ந்து வந்த பாப்திஸ்து மி'னெரி திரு. ஆலன் அவர்கள் பண்டித ராமாபாயைச் சந்தித்து சுவிசேஷம் சொன்னார். தான் படித்த புராண வேதக்கதைகளைவிட இவை அதிகம் வேறுபட்டதாகவும் உண்மையுள்ளதாகவும் இருப்பதை உணர்ந்து வேதத்தை இன்னும் அறிய ஆர்வம் கொண்டார். தனது முந்தைய மதத்திலிருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தது.

ராமாபாய்க்கு ஹர்போட் என்ற மி'னெரி மராட்டிய மொழியில் புதிய ஏற்பாட்டைக் கொடுத்து அதைப் படிக்க உற்சாகப்படுத்தினார். கிறிஸ்துவைப்பற்றி இன்னும் அறிய விருப்பம்கொண்டு *1883 – ம்* ஆண்டு இங்கிலாந்து தேசத்திற்கு சென்றார். அங்கு இவரது விசுவாசத்தைப் பலப்படுத்தி ஞானஸ்நானத்திற்குள் வழி நடத்தினார்கள். *1886 – ல்* அமெரிக்கா தேசத்திற்கு போக வாய்ப்பு கிடைத்தது. பண்டித ராமாபாய் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபின் கிறிஸ்துவுக்காக வாழவேண்டும் கிறிஸ்துவுக்காய் முன் மாதிரியாய் செய்யவேண்டும் என்ற வாஞ்சையுடன் ஜெபித்துக் கொண்டிருந்தபோது தனது தேசத்தின் பெண்களின் நிலையே அவரது கண்முன் வந்தது.

குழந்தைத் திருமணத்தினால் தன் கணவன் யாரென்றுகூட தெரியாமல் விதவை யான பல கொடுமைக்குள்ளாக்கப்பட்ட சிறு பெண்பிள்ளைகள், ஏழைப் பிள்ளைகள் ஒடுக்கப்பட்ட பெண்கள், கல்வியறிவு இல்லாமல் வறுமையில் வாடும் பெண்கள் மேல் கொண்ட மனதுருக்கத்தால் சாரதா சதான் என்ற இல்லத்தை அமைத்தார். அதினால்சரீர ஆத்மீக தேவைகளைச் சந்திக்க முடிந்தது. இல்லத்தின் தேவைகளுக்காக கர்த்தரையே நம்பி இருந்தார். ரமாபாயிடம் காணப்பட்ட தாழ்மை அன்பு பொறுமை தன்னலமற்ற செயல்கள் மற்ற பெண்களை கிறிஸ்துவண்டை வழி நடத்திற்று. முதலில் இரண்டு இளம் விதவைகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர். மனித உதவிகள் நின்றபோது தேவனையே சார்ந்து அவரையே விசுவாசிக்க ராமாபாய்க் கற்றுக் கொண்டார். *1895 – 96 – ல்* ஏற்பட்ட பஞ்சத்தில் பலர் மரித்துப்போனபோது அனாதையாக்கப்பட்ட சிறுவர் சிறுமியர் இவரது இல்லத்தில் *300 – க்கு* மேற்பட்ட குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். இடம் பற்றாக்குறையினால் பூனாவிற்கு 48 கி.மீ தொலை வில் **""கேட்கான்""** என்ற பகுதியில் முக்தி என்ற புதிய இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் *2000 – க்கு* மேற்பட்ட குழந்தைகளும் பெண்களும் பராமரிக்கப்பட்டனர். சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பிலிருந்து வந்த பெண் விதவைகளை தனது அன்பான வழி நடத்துதலால் கர்த்தரிடம் திருப்புவார். **""ஆண்டவருக்கு நான் கீழ்ப்படிந்த நாள்முதல் வெகு பாக்கியசாலியாக இருக்கிறேன். என் எல்லாத் தேவைகளுக்கும் அவரையே சார்ந்திருப்பது எத்தனை மகிமை""** என்று கூறினார். இந்திய தேசத்தின் மக்களை பெண்களின் விடுதலை கல்விக்காகத் தட்டி எழுப்பிய ஒரு இயக்கம் முக்தி மி'ன். *1922 – ல்* இவ்வுலகை விட்டுச் சென்ற பண்டித ராமாபாய் மெழுகுவர்த்தியாய் கரைந்து ஆதரவற்ற பெண்களுக்கென தன்னை ஊற்றிக்கொடுத்து ஒளி கொடுத்தவர். ரமாபாயின்

இறுதி வார்த்தைகள் **““என்னைப் பயன்படுத்தியவர் உன்னையும் பயன்படுத்த வல்லவர்””** என்பதே என்றும் கிறிஸ்துவுக்கே மகிமை செலுத்தினார். நம் வாழ்வையும் தேவன் கரத்தில் கொடுத்து நமது தேச மக்களின் விடுதலைக்காக ஊழியம் செய்ய நம்மை அழைக்கிறார் ஆண்டவர்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

---

## சிரி.... சிந்தி

***உனக்கு உதவ உன் மூளையை பயன்படுத்து, பிறர்க்கு உதவ உன் மனதை பயன்படுத்து.***

**- அஹமதி தமிழ் திருச்சபை**

---



## சரியாய் பதில் சொன்னால் தானே பரிசு!

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. – – – – – – – – – – தரித்தது – – – – – – – – – – – – – – – – – நின்றது?
2. – – – – – – – எப்பிராயீமுடையது, – – – – – – – மனாசேயினுடையது?
3. உங்கள் – – – – – – – – – – – – – – – – – – – – – மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்?
4. புத்திமானாய் நடந்துகொள்ள எதை, எப்படி தியானிக்க வேண்டும்?
5. யோசுவா யாரை ஆசீர்வதித்து எதை சுதந்தரமாக கொடுத்தார்?
6. யாருக்கு எது நினைப்பூட்டும் அடையாளமாக வைக்கப்பட்டது?
7. யாருக்கு விரோதமாக எவனும் தன் நாவை அசைக்கவில்லை?
8. திம்னாத் சேராவில் அடக்கம் பண்ணப்பட்டது யார்?
9. முதல் மாதம் பத்தாம் தேதியிலே எங்கு பாளயமிறங்கினார்கள்?
10. எதையெல்லாம் கைக்கொள்ள நிர்ணயம் பண்ணவேண்டும்?
11. எகிப்தின் நிந்தையை இராதப்படிக்கு புரட்டிப் போட்ட ஸ்தலம் எது?
12. எதற்கு ஏத் என்று பேரிட்டார்கள்?
13. எது கர்த்தருக்கு பரிசுத்தமானவை?
14. முழு கற்களால் என்ன கட்டப்பட்டது? எங்கு கட்டப்பட்டது?
15. எவர்கள் குணமாகுமட்டும் பாளயத்தில் தங்கியிருந்தார்கள்?

குறிப்பு:- வேதாகமத்தில் "யோசுவா" புத்தகத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 23-08-2013 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

பலியிடுவதைப்பார்க்கிலும்; நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம். -நீதி. 21:3

# நீயா? நானா?

ரொட்டிக் கடை வைத்திருந்தார் ஒருவர். அவர் கடைக்கு வெண்ணெய் சப்ளை செய்பவர் மீது அவருக்கு வெகுவாக சந்தேகம். தன்னை அவர் ஏமாற்றுவதாகவருத்தம் இருந்தது. அரை கிலோ வெண்ணெய் என்று அவர் தருவது அரை கிலோவே இல்லை. எடை குறைவாக இருக்கிறது என்று குற்றம் சாட்டினார். சண்டை முற்றி ஒரு நாள் நீதிபதி முன் வழக்கு வந்தது.

வெண்ணெய் வியாபாரி தன்னிடம் கொடுத்த வெண்ணெய் பொட்டலத்தை நீதிபதி முன் நிறுத்துக் காட்டிய ரொட்டிக் கடைக்காரர் **""பாருங்கள் 450 கிராம் தான் இருக்கிறது. இப்படித்தான் என்னை பலமுறை ஏமாற்றி இருக்கிறார். இவரை தண்டியுங்கள்""** என்று கூச்சலிட்டார். நீதிபதி வெண்ணெய் வியாபாரியை பார்த்து என்ன சொல்லுகிறீர்கள்? ஒவ்வொரு முறையும் 50 கிராம் குறைவாகத் தரலாமா! இது குற்றமல்லவா என்று வெண்ணெய் வியாபாரியை நீதிபதி கேட்டார்.

அதற்கு வெண்ணெய் வியாபாரி, ஐயா... என்னிடம் எடைக்கல் கிடையாது. அதனால் 500 கிராம் எடையுள்ள பொருள் ஏதேனும் ஒன்றை எடைக் கல்லுக்குப் பதிலாக பயன்படுத்துவது வழக்கம். பெரும்பாலும் இவரது கடை ரொட்டியைத் தான் வாங்குகிறேன். அதையே அவ்வாறு பயன்படுத்துவது வழக்கம். ஏனென்றால் பாக்கெட் மீது எடை 500 கிராம் என்று எழுதப்பட்டிருப்பதை நம்பி இவரது ரொட்டியை எடைக் கல்லுக்குப் பதிலாக தராசில் பயன்படுத்துவேன். இப்போது பாருங்கள் என் வெண்ணெயும் இவரது ரொட்டியும் சம எடையாக இருக்கும் என்று தராசில் இரண்டையும் எதிர் எதிராக வைத்தார். இரண்டும் சமமாக இருந்தது.

எல்லோரும் பிறர் தன்னை ஏமாற்றக் கூடாது என்று நினைக்கிறார்களே ஒழிய தானும் பிறரை ஏமாற்றக் கூடாது என்று ஏன் நினைப்பதில்லை! நாம் கிறிஸ்துவின் சுபாவங்களை வெளிப்படுத்தாமல் நம் சுற்றத்தார் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?. நம் ஆண்டவரும் கூட இதையே நம்மிடம் கேட்பாரே. ஆம்! அவர் சொன்னதை கொஞ்சம் கவனியுங்களேன்... **""ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்""** (மத். 7:12). கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

**அன்புள்ள சகோதரன்**
**சிவகுமார்**

---

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் - போன்: 94494541

ஏழையாயிருக்கிறான் என்று ஏழையைக் கொள்ளையிடாதே; சிறுமையானவனை நியாயஸ்தலத்தில் உபத்திரவப்படுத்தாதே... நீதி. 22:22

# அமைதியைத் தேடி




எத்தனை கோடிகள் கொட்டிக் கொடுத்தாலும்
வித்தக தவங்கள் மெத்தவே செய்தாலும்
நித்தமும் தேவனின் சித்தத்தை செய்யாவிடில்
மொத்தமாய் மன அமைதி அற்பமாய் அகன்றுபோம்

பணத்தினால் ஒரு சிலர் மன அமைதி தேடுகின்றார்
புகழினால் பலரும் மன நிறைவு நாடுகின்றார்
பணமும் புகழும் மாயையாய் அகன்றிடும்
பாசமில்லா பொய் வாழ்வு பாதியில் நிறைவுறும்

பத்து மாதம் காத்திருந்து
வெறும் காற்றை பெற்ற கதையாய்
பாரெங்கும் அலைந்து திரிந்து
மன அமைதி பெற்றிடாமல்
பாதை தவறி வாழ்வை வீணாக கழிக்காதீர்
பரிசுத்த வேதம் சொல்லும் மெய்வழியை நாடுவீர்

போதும் என்ற மனதும் ஈகை செய்யும் நெஞ்சும்
பிறரை நேசிக்கும் குணமும் தவறை மன்னிக்கும் மாண்பும்
பணிவும் இரக்கமும் செய்து
நிதம் இன்முகம் காண்பித்து
பிறரை உயர்வாய் நோக்குதலே
**““மன அமைதிக்கு””** வேதம் சொல்லும் வழி

**- ஸ்டாலின்**


---

## சபையின் 2013-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# “பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது”

ரோமர். **6:14**

உன் உதடுகள் செம்மையானவைகளைப் பேசினால்; என் உள்ளிந்திரியங்கள் மகிழும். -நீதி. 23:16



## ஜுலை மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

1. நீதியை — உபா. 16:20.
2. பனி துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல் — உபா. 32:2.
3. நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை வெறுத்து அருவருக்க வேண்டும். — உபா. 7:26.
4. ஆபிப் மாதத்தில். — உபா. 16:1.
5. எப்புன்னேயின் குமாரனாகிய காலேப். — உபா. 1:36.
6. அக்கினிமயமான. — உபா. 33:2.
7. ஏனாக்கின் புத்திரர். — உபா. 9:2 – 4
8. செவிகொடாத இஸ்ரவேல் ஜனங்கள் எமோரியரால் துரத்தப்பட்டார்கள் — உபா. 1:44.
9. நூனின் குமாரனாகிய யோசுவா. — உபா. 34:9.
10. பரிதானம். — உபா. 16:19.
11. கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாமற் போவதினால் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளை போல. — உபா. 8:20.
12. லேவியனை. — உபா. 12:19.
13. தேவனாகிய கர்த்தருக்கே, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் உரியவைகள் — உபா. 29:29
14. கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையும் கூறக்கடவாய். — உபா. 11:29
15. ஓரேபில். — உபா. 5:2.



## ஜுலை மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| Sis. மரகதம் ஸ்டீபன் | Sis. சாந்தி |
| Sis. பத்மினி | Sis. மரிய குளோரி தாஸ் |
| Sis. செலின் டேவிட் | Sis. ஹெப்சி சாம் |
| Sis. ஜெபா | Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம் |
| Sis. அகிலா ராஜ செல்வன் | Sis. கீதா ஜெயக்குமார் |
| Sis. லைசா பொன்னையன் | Sis. ஹேனா எசேக்கியேல் |
| Sis. சுபா ஸ்டீபன் | Sis. ஜீனா சதீஸ்குமார் |
| Sis. சுகந்தி தம்புகுமார் | Sis. லதா கிறிஸ்டோபர் |
| Bro. எட்வின் சாம் | Bro. ஜாண் |
| Bro. பக்தராஜ் | Bro. அருள்மணி |
| Bro. இம்மானுவேல் | Bro. ஜாண்சன் |
| Bro. தர்மர் | |

பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே; அவர்களோடே இருக்கவும் விரும்பாதே. -நீதி. 24:1

இது..... எங்க ஏரியா!

ஞாயிறு பள்ளி செல்லங்கள்

அஹமதி தமிழ் திருச்சபை

# மேலானவைகளையே நாடுங்கள்

**Hello friends,**

நான் யார் தெரியுமா?
நான் வேதாகமத்தில் யோவான் 6:9 — ல் இருக்கிறேன்
இயேசப்பா கேட்டவுடன் என் அம்மா எனக்கு கொடுத்த
மதிய உணவை தானமாகக் கொடுத்திட்டேன்
என் மதிய உணவு என்ன தெரியுமா?
ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மட்டுமே
ஜனங்கள் பசியாற இயேசப்பா விரும்பியதால்
என் பசியை பெரிதாக நான் எண்ணவில்லை
இயேசப்பா அதை வாங்கி ஸ்தோத்தரித்து பகிர்ந்ததால்
மூன்று நாளாய் சாப்பிடாத ஜனங்களை போஷித்தது
எத்தனை பேர்கள் சாப்பிட்டார்கள் தெரியுமா?
ஐயாயிரம் புருஷரும் அவர் தம் குடும்பமும்
மீதமாக எடுத்தது பன்னிரெண்டு கூடைகள்
இயேசப்பா ஆசீர்வதித்தால் குறை என்பது ஏது?
என் பெயர் என்னவென்று கேட்கின்றாயா?
அன்றும் சொல்லவில்லை இன்றும் சொல்ல மாட்டேன்
என் பெயரை சொல்லி விட்டால் பரலோகில் பலனில்லை
என் பெயர் பிரபலமாவதை நான் விரும்ப வில்லை
என் பெயரை இப்போது சொல்லி விட்டால்
என் பலன் இன்றோடு தீர்ந்து விடும்
பரலோகில் பலனின்றி போய்விடும்

**""குறையாத பொக்கிஷத்தை பரலோகத்திலே உங்களுக்கு சம்பாதித்து வையுங்கள்""** (லூக் — 12:33)

**""பூமியிலுள்ளவைகளல்ல மேலானவைகளையே நாடுங்கள்""** (கொலோசெயர் — 3:2)



# கடுமையான இருமல்

குவைத் பாட்டி

கடுமையான இருமல் இருந்தால் மூன்று கப் தண்ணீருடன் வெற்றிலையையும் மிளகையும் போட்டு கொதிக்க வைத்து குடித்து வந்தால் விடுதலை கிடைக்கும்.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான். -நீதி. 25:28



# கண்ணே! மணியே!! முத்தே!!!

## ஒரு ஊரில்

ஒரு தாய்க்கு ஒரே மகன்: அவன் சிறுவன். ஒரு நாள் தையல் கடையிலிருந்து ஊசியை திருடிக் கொண்டு வந்தான். அம்மா அவனை மெச்சினாள். மற்றொரு நாள் பள்ளியிலிருந்து புத்தகத்தை திருடிக் கொண்டு வந்தான். மகனை புகழ்ந்து துதி பாடினாள் அன்னை. மாதங்கள் சில கடந்தன. மகனின் திருட்டுத்தனமும் வளர்ந்து உடை, பாத்திரங்கள், பணம், பொருட்கள் என செல்லுமிடமெல்லாம் திருட ஆரம்பித்தான். இப்படி அதிகமாய் திருடிய மகனை உச்சி மோந்து இன்னும் அதிகமாய் புகழ்ந்து மெச்சினாள் தாய்.

பெரியவனாய் வளர்ந்த மகன் திறமை வாய்ந்த திருடனாகிவிட்டான் என்ற பெருமையும் அந்த தாய்க்கு இருந்தது. பல நாள் திருடன் ஒரு நாள் பிடிபடுவான் என்பது போல செல்வர் ஒருவருடைய வீட்டில் விலை உயர்ந்த அணிகலன்களை திருடிக் கொண்டிருக்கும் போது கையும் களவுமாக பிடிபட்டான். போலீசாரால் வழக்கு தொடரப்பட்டு, அவனுடைய கைக்கும் விலங்கு மாட்டப்பட்டது. தீர்ப்பில் அவன் திருடன் என்று உறுதி செய்யப்பட்டு சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டான். ஓவென்று ஒப்பாரி வைத்து நின்றாள் அந்த அறிவிலி அன்னை. ஓலமிட்டு ஒப்பாரி வைத்து நின்ற தாயை பார்த்து மகன் உரத்த சத்தமாய் சொன்னான், அறிவில்லா அன்னையே! இப்பொழுது அழுது என்ன பயன்? சின்னஞ்சிறு பருவத்திலே நீ என்னை துன்மார்க்கமான திருட்டுத் தனத்திலிருந்து திருத்தியிருந்தால் இன்று கை விலங்கோடு கடுஞ்சிறைக்கு செல்வேனா?... என்று சொல்லிக் கொண்டே கடுஞ்சொற்களால் தூசித்தான். அந்த தாயோ இன்னும் அதிகமாய் ஓலமிட்டு அழுதாள்.

பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். சிறு பிள்ளைகளிடம் தோன்றும் தப்புகளை, தீய குணங்களை முளையிலேயே கிள்ளி விட வேண்டும். **""பிறம்பை கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்: அவன் மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்""** (நீதி. 13:24). ஆகவே பிள்ளைகளை அன்பு செய்கிற பெற்றோர்களே! பிள்ளைகள் தவறு செய்கின்ற பொழுது தட்டிக் கொடுக்காதீர்கள். தண்டிக்க மறந்து விடாதீர்கள். **""கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக""** (எபே. 6:4). தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**கர்த்தரின் கிருபையில்**
**அ.்.பியா ஆ. தாஸ்**

படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான்:. -நீதி. 26:27

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் _ போன்: 99460225

# ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485



## சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்

——(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

Church website: www.ahmaditamilcongregation.org
Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

Private Circulation only